**JUNE/JULY 2021**

## CLT10 — தமிழ் – I

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக.

1. தமிழ் எவற்றை வளர்ப்பதாகப் பாரதிதாசன் கூறினார்?

2. 'வழிபாடு' கவிதையில் 'பயனொன்றில்லை' என்று கவிமணி எச்செயலைக் கூறிகிறார்?

3. 'வைராக்சியம்' என்ற சொல் வழங்கும் வாசகம் இரண்டினை எழுதுக.

4. பழங்காலத்தில் பெண்கள் காதில் அணியும் அணிகலன்களின் பெயர்களில் இரண்டினைக் கூறுக.

5. பாரதம் என்ற நாடகம் தோன்ற பின்னணியாக அமைந்த நிகழ்வு யாது?

6. 'கொல்லிப்பாவை' நாடக ஆசிரியர் யார்? நாடக மாந்தர்கள் இருவரைச் சுட்டுக.

7. முக்காலியிலிருந்து கீழே விழுந்த குடும்ப நண்பர் யார்?

8. 'சேலத்தார் வண்டி' கதைத் தலைவனின் வகுப்புத் தோழன் யார்? அதனுடைய தந்தை யார்?

9. வினைச் சொற்கள் இரண்டனை எழுதுக.

10. பிறமொழிச் சொல்லை நீக்கி தமிழ்ச் சொல்லால் அமைக்க.

பேருந்து நிலையத்தில் பஸ்ஸுக்காகக் காத்திருக்கும் போது ஜாக்கிரதையாக இருங்கள்.

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

11. (அ) பெண்ணியச் சிந்தனையில் அமைந்த கவிஞர்.சுகிர்தாரணியின் உணர்வுகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) அகதியின் மன உணர்வை கவிஞர் மாலதி மைத்லி எங்ஙனம் விளக்கியுள்ளார்?

12. (அ) கைவளையல் குறித்து மயிலை சீனி. வேங்கடசாமி கூறியுள்ள கருத்துக்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) 'மோதிரம்' குறித்து செய்திகளை எழுதுக.

13. (அ) பிரிவினை பற்றி அண்ணாவின் பாரதம் நாடகம் புலப்படுத்தும் கருத்துக்களை எழுதுக.

(அல்லது)

(ஆ) 'கொல்லிப்பாவை'– நாடகக் கருவை எழுதுக.

14. (அ) 'நாற்காலி' சிறுகதையில் காணப்படும் நகைச்சுவை உணர்வை எழுதுக.

(அல்லது)

(ஆ) 'சேலத்தார் வண்டி' தலைப்பு பொருத்துமாற்றைக் கூறுக.

15. (அ) 'ணகர', 'னகர' வேறுபாட்டைச் சான்றுகளுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) 'லகர', 'ளகர' வேறுபாட்டை எடுத்துக்காட்டுகளுடன் எழுதுக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விரிவான விடை எழுதுக.

16. 'ஆறாவது அறிவு' குறித்து கவிஞர் அப்துல் ரகுமான் கூறிய கருத்துக்களை விளக்கி எழுதுக.

17. வாழ்க்கையும் வைராக்கியமும் குறித்து ரா.பி.சேதுப்பிள்ளை கூறுவனவற்றை விளக்குக.

18. ஓலியின் வீரமும் ஈகை பண்பும் பற்றி விளக்குக.

19. சிறுகதை ஓட்டத்திற்கு நாற்காலி துணைநின்ற பாங்கினை விவரிக்க.

20. உரைநடை தோற்றம் வளர்ச்சி பற்றி கட்டுரை வரைக.